**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைப்பாட்டினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டு நியமம்

**இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

(அ) வெளி நிறுவனங்களிலிருந்து அல்லது தனிப்பட்டவர்களிடமிருந்து கிடைத்த மானியங்களை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் கணக்கீடு செய்யாது அம்மானியங்களிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டு மிகுதியான ரூபா 41,375 தொகை மொத்தச் செலவுகளிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக இலங்கை வங்கியிலிருந்து கிடைத்த ரூபா 150,000 தொகையான நன்கொடை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அப்பணத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்ட ரூபா 114,987 தொகையான

கட்டிடங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. மிகுதிப்பணமாகிய ரூபா 35,013 தொகை மாத்திரம் நடைமுறைவேலைகளின் பெறுமதியிலிருந்து கழித்துக்காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானச் செலவுக் கணக்குகளின் பிரயாணச் செலவு மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,888,881 தொகையான வெளிநாட்டு பிரயாணச் செலவுகளை தனியாக இனங்கண்டு காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது 2010 ஆம் ஆண்டு தொடர்பாகச் செலுத்தப்பட்ட ரூபா 148,048 தொகையான உபகரணங்களைப் பராமரித்தல் செலவுகள், அங்கத்துவப் பணம் பருவகாலச் சீட்டுப் படிகள், இணையத்தள சேவைச் செலவுகள் என்பவற்றை 2010 ஆம் ஆண்டிற்கான செலவுகளாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக தொடர்ந்தும் முற்கொடுப்பனவுகளாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தன.

(இ) தற்போது விற்பனை செய்யப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட புத்தக இருப்பொன்றினை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்குச் செலுத்தப்பட்ட ரூபா 342,875 தொகையான அகற்றுதல் கட்டணத்தினை ஆண்டிற்கான செலவுகளாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முற்கொடுப்பனவுகளாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் தீர்த்துவைக்கப்படாதிருந்த ரூபா 29.4 மில்லியன் தொகையான முற்பணங்களில் 2011 செப்தெம்பர் வரையில் ரூபா 11,69 மில்லியன் தொகையான முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படாதிருந்ததுடன் தீர்த்துவைக்கப்படாத ரூபா 1.2 மில்லியன் தொகையான முற்பணங்களை இனங்காண முடியாதிருந்தது. தீர்த்துவைக்கப்பட்ட ரூபா 1.66

தொகையான முற்பணங்களுக்கான சான்றுகளாக ஆவணங்களின் போட்டோ பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டுவரும் ரூபா 398,591 தொகையான பெறவேண்டிய மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 570,622 தொகை ஏனைய நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் வைப்புச் சான்றிதழ், மீதிகளை உறுதிப்படுத்தல்கள், அது தொடர்பான மூல ஆவணங்கள் முதலியன இல்லாமையின் காரணமாக அம்மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதிகள் நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 - 2011 காலப்பகுதி தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தினை கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கோ அல்லது உரிய காலப்பகுதிக்குள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பிவைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் மீளாய்வு**

**2.1.1 நிதிசார் விளைவுகள்**

சிறீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் பட்டப் பின்படிப்பு நிறுவனம், சுயநிதி நிதியங்கள் என்பன தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,057,800 கூட்டுமொத்த

பற்றாக்குறை சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 16,261,041 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 14,203,241 தொகையான நிதிசார் விளைவுகளின் முன்னேற்றம் ஏற்படுவதற்கு அரசாங்க மானியம், ஏனைய நானாவித வருமானங்கள், நிலையான சொத்துக்கள் விற்பனை வருமானம் என்பன ரூபா 20,695,519 ஆல் அதிகரித்தமை முக்கியமாக தாக்கத்தினை விளைவித்துள்ளது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

#### (அ) பல்கலைக்கழகத்தின் பௌதீக மற்றும் மனித வளங்களின் குறைந்த பயன்பாடு

| ஆண்டு | முப்படைகளிலிருந்து கோரப்பட்ட எண்ணிக்கை | சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் அளவு | விண்ணப்பித்த எண்ணிக்கையினை விட குறைவாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அளவு | சேர்த்துகொள்ளப் பட்ட மாணவர்களில் படிப்பைக் கைவிட்ட மாணவர்களின் எண்ணிக்கை | ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை | கோரப்பட்டதன் பிரகாரம் வெற்றிடங்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006 | 130 | 109 | 21 | 12 | 33 | 25% |
| 2007 | 122 | 92 | 30 | 10 | 40 | 33% |
| 2008 | 205 | 151 | 54 | 17 | 71 | 35% |
| 2009 | 239 | 209 | 30 | 8 | 38 | 16% |
| 2010 | 187 | 168 | 19 | 4 | 23 | 12% |

மேலுள்ள அட்டவணையின் பிரகாரம் கடந்த 5 ஆண்டுகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் செயல்முன்னேற்றத்தினைப் பரிசோதனை செய்தபோது முப்படைகளிலிருந்து வருடாந்தம் விண்ணப்பித்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைகுச் சமமான அளவில் சேவை மாணவப் படைகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பித்த எண்ணிக்கையினை விடக்குறைவாகவே சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தன.

அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவை மாணவப்படைத் தொகுதிகளில் கற்கை நெறிகளினைக் கைவிட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொள்ளும் போது 2006 இலிருந்து 2010 வரை 12% இலிருந்து 35% வரையான வீச்சுடைய வெற்றிடமான சேவை மாணவப்படைகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

இலங்கையின் முப்படைகளைச் சார்ந்த பல்வேறு தரத்திலான 285,152 அளவான படை அங்கத்தவர்கள் காணப்படுவதுடன் அந்நபர்கள் பேல்வேறு நிபுணத்துவ ஆற்றல்களையும் கல்வித் தகைமைகளையும் கொண்டுள்ள உத்தியோகத்தர்களையும் ஏனைய ஊழியர்களையும் உள்ளடக்குகின்றார்கள். இதற்கிணங்க அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும் தொழில் திருப்தியினை அதிகரிப்பதன் மூலம் மிகச் சிறந்த சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கும் பொருத்தமானவற்றிற்கு மத்தியில் தற்பொழுது நாட்டில் காணப்படுகின்ற உயர்கல்வி நிறுவனங்களில் அல்லது ஏனைய பொருத்தமான வேலைத் திட்டங்கள் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படாததனால் அதற்காக இப்பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் வாய்ப்புக்களை ஆய்வு செய்து அமுல்ப்படுத்துதல் பொருத்தமானது என அறியப்படுகின்றது.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழக பதவிகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட நபர்களின் உயர்கல்வித் தகமைகள் உறுதிப்படுத்தப்படாமையால் போலிச் சான்றிதழினைச் சமர்ப்பித்த விரிவுரையாளர் ஒருவராக ஒரு ஆண்டினை அண்மித்த காலம் சேவையில் ஈடுபடுவதற்கு நபர் ஒருவருக்கு வாய்ப்புக்கிடைத்திருந்தது. அவ்வாறான நிலைமையின் மூலம் பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கும் பல்கலைக்கழகம் வழங்குகின்ற சேவையின் தரத்திற்கும் பாதகம் ஏற்படும்.

(ஆ) மருத்துவ காரணங்களின் அடிப்படையில் இராணுவச் சேவையிலிருந்து 2009 திசெம்பர் மாதத்திலிருந்து நீங்கிய கடட் உத்தியோகத்தரின் அகற்றுதல் நடவடிக்கைகயினைப் பூர்த்திசெய்வதற்கு பல்கலைக்கழகத்தினால் 2010 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரை காலம் எடுத்ததன் காரணமாக அந்த நடவடிக்கை 7 மாதங்கள் 14 நாட்கள் தாமதமடைந்திருந்தன.

### 2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2009 யூலை மாதம் ரூபா 61,600 செலுத்தி ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லலினைப் பதிவுசெய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இயந்திரத்திலுள்ள சில குறைபாடுகளின் காரணமாக நடைமுறை ஆண்டின் இறுதிவரை அதனை செயற்திறனாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்ததுடன் அதன் உத்தரவாத காலம் மிகைக்கும் வரை அதன் குறைபாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மத்தியில் அந்த இயந்திரத்தின் குறைபாட்டினைக் கருத்தில் கொள்ளாது அவ்வகையைச்சார்ந்த இயந்திரம் ஒன்றினை 2010 செப்தெம்பர் மாதம் ரூபா 61,600 தொகைக்கு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பின்வரும் மூலதனச் செலவுகளுக்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

| | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| போதி நடவடிக்கைகள் | 112,169 |
| நகரக்கூடிய மேடைகள் | 623,788 |
| | 735,957 |

(ஆ) பாதீடு செய்யப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையே 10% இலிருந்து 100% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் செயற்திறனான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் அவ்வப்போது கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் உப வேந்தருக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் மேலும் அவதானம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(ஆ) உலர் உணவுகளைப் பெற்றுக்கொள்ளல்

(இ) வழங்கல்களும் சேவைகளும்

(ஈ) ஆட்சேர்ப்பு

(உ) சொத்துக்கள் கட்டுப்பாடு